**சுருக்கம்**

தொழில் துறை – 2022–2023ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பு – தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் – அரியலூர் புதிய சிமெண்ட் ஆலையில் மாற்று எரிபொருள் எரியூட்டும் அமைப்பு ஒன்று (Alternate Fuel Feeding System) 30 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும் – அனுமதி ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**தொழில் (எம்.ஐ.டி.2) துறை**

அரசு ஆணை (டி) எண்.37

நாள் : 25.04.2022
சுபகிருது – சித்திரை – 12
திருவள்ளுவர் ஆண்டு 2053

ஆணை:

2022–2023ஆம் ஆண்டிற்கான தொழில் துறை மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

"தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் கிளிங்கர் உற்பத்தி செய்வதற்கு நிலக்கரியை மட்டுமே எரிபொருளாகப் பயன்படுத்தி வருகிறது. கரியமில வாயு வெளியேறுவதை குறைக்கவும், சுற்றுச்சூழல் பாதிப்புகளை கட்டுப்படுத்தவும், படிம எரிபொருளான நிலக்கரிக்கு மாற்றாக, RDF உள்ளிட்ட மாற்று எரிபொருட்களை பயன்படுத்தவும், இந்தியாவில் சிமெண்ட் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் முனைப்புடன் செயல்பட்டு வருகின்றன. அதனை பின்பற்றி, 25 சதவீத மாற்று எரிபொருள் பயன்பாட்டை படிப்படியாக அடைய, அரியலூர் புதிய சிமெண்ட் ஆலையில் 30 கோடி ரூபாய் செலவில் மாற்று எரிபொருள் எரியூட்டும் அமைப்பு (Alternate Fuel Feeding System) ஒன்று, தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தால் நிறுவப்படும்".

2. மேற்காணும் திட்டத்தினை, தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் தனது சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டு, நடைமுறைகளில் உள்ள விதிகளைப் பின்பற்றி, குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்த அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. இத்திட்டத்தின் வளர்ச்சி குறித்து மாதந்தோறும் அரசுக்கு அறிக்கை அனுப்புமாறு தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் பணிக்கப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ச. கிருஷ்ணன்,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்,
5–வது தளம், ஆவின் இல்லம்,
எண்.3A, பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை, நந்தனம், சென்னை– 600 035.
நகல்
மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009,
தொழில் (அ.நி.மு2/வ.செ.தி.1) துறை, சென்னை – 600 009.
இ.கோ/உ.நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 25/4/2022